**(சுருக்கம்)**

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடத்திற்கு தனி ஊதியம் மாதமொன்றுக்கு ரூ.500/–அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:70

நாள்: 26—2—2011.
மாசி,14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்:--**

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள். 10–2–2011.
3. தமிழ்நாடு வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட மனு.

– – – – –

**ஆணை:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடத்திற்கு திருத்திய ஊதிய விகிதம் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4,800/– துணை வட்டாட்சியர்களுக்கு இணையாக அனுமதித்து 12–12–2007 முதல் நிர்ணயம் செய்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வருவாய்த் துறையில் பணிபுரியும் துணை வட்டாட்சியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- தனி ஊதியம் அனுமதித்து ஆணையிடப் பட்டுள்ளதை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் நீட்டித்து வழங்குமாறு மேலே மூன்றில் படிக்கப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையினை அரசு ஏற்று ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் வருவாய்த் துறையில் உள்ள துணை வட்டாட்சியர்களுக்கு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மாதம் ஒன்றுக்கு தனி ஊதியமாக அனுமதிக்கப்பட்ட ரூ.500/–ஐ நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே அனுமதிக்கப்பட்ட தனி ஊதியம் 1-–3-–2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை – 9.
இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை – 108.

/த.பி.பா./

மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள்(ம) உரிமைத் தொகை), சென்னை—18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை—9 / மதுரை.
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை, சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை—9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/8.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—2.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. ஸ்ரீதர்
26/2/2011

ஆராய்ச்சி அலுவலர்.